# இந்துக்குரல்
# HINDU VOICE

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
20 MAY 1999
PERIODICALS DIVISION

Price Rs.15.00 | விலை ரூபா 15.00 | Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/26/News/98 | ISSN 1391 - 0744

குரல் 8 ஒலி2 | வெகுதானிய பங்குனி - சித்திரை 1999 | January - February 1999 Voi.8 No.2

**இறைவா உனக்கபயம்**

என்னை யெனக் கென்னாலே காட்டிவைத்த இறைவா
எல்லாம்செய வல்லவனே எந்தன் பெருமானே
அன்னையினும் அப்பனினும் அன்புமிக்க அரனே
ஆன்மாவுக் கான்மாவே ஆதியந்தம் இல்லானே
தென்னைபனை சேரிலங்கைத் திருவேயென் செல்வமே
தேவாதி தேவனே சிறியே னுனக்கபயம்.

நற்சிந்தனை

சிவமயம்




*THIS LITTLE SELF SURRENDERS UNTO THEE*

O Lord it is Thou who has made me realise Self by self,
O Supreme One, Thou hast the power to accomplish all!
Thou art to me more loving than my mother and my father.
The Soul of my soul indeed art Thou!
For Thee there is no end and no beginning.
Thou art my wealth O Lord of Lanka where the palmyrahs thrive!
O God of gods art Thou! This little self surrenders unto Thee.

# எங்கள் குருநாதன் யோகர் சுவாமிகள்

தொண்டன்

**நமது காலத்தில் அவதரித்த மேன்மையும் ஞானமும் நிறைந்த வணக்கத் துக்குரிய சித்தர் யோகர்சுவாமிகள். அவரது அருள் வழி என்றும் நம்மை உய்விக்கும் இந்த இதழ் அவரது நினைவாக மலர்கின்றது.**



*குருநாதர் யோகர் குணக் குன்றிறைவன்
இருபாதங் காப்பாமெமக்கு.*

உள்ளத்தில் உன்னி உன்னி நினைத்து உருகித் தொழுபவர்தம், உளநோயும் உடல் நோயும் தீர்க்கும் ஞான வடிவேற்குமரன் அருளொளி பரப்பும் இடமே யாழ்ப்பாணத்து நல்லூர்.

இந்நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் முன்றிலில் பெரிய சித்திரத்தேர் நிற்கின்றது. அந்தத் தேரடியில் ஊரார் 'விசர்ச் செல்லப்பா' என்று பட்டப்பெயர் சூட்டிய உண்மை ஞானி செல்லப்பாச் சுவாமிகள் தங்கியிருந்து மக்களுக்கு ஞானமிர்தம், அருளமுதம் பொழிவது வழக்கம். இன்னும் செயற்கரிய செயல்களையும் செய்வதுண்டு.

**"யாரடா நீ
தேரடா உன் உள்ளே"**

**என்றார் செல்லப்பர். இவற்றைக் கேட்டதும் யோகர்**

எங்கள் குருநாதர் யோகர் சுவாமிகள் செல்லப்பாச் சுவாமிகளைக் கண்டார். அவர்தம் திருப்பெயரைக் காதாரக் கேட்டார். உணர்ந்தார். அவர் உரைக்கும் மெய்யுரைகளைக் கேட்டார். செல்லப்பாக் குருவின் திருப்பாதங்களைத் தீண்டினார். தன்னை மறந்தார். தன்னை உணர்ந்தார். தலைவனை அறிந்தார், சிவயோகநாதன் ஆனார். இ·துண்மை.

குருநாதர் தனது குருவாகிய செல்லப்பாச் சுவாமிகளைக் கண்டது முதல் பெற்ற பயனையும், அனுபவத்தையும் உலகம், உயிர், கடவுள் என்னும் முப்பொருளுண்மைகளையும் பாடல்களாக 'நற்சிந்தனை' என்னும் நூல் வடிவிற் காணலாம்.

'நற்சிந்தனை' நமது சிந்தையைத் தெளிவாக்கும் மயக்கத்தை அறுக்கும், வையகத்தில் நயமாக வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும், மெய்யுணர்வையூட்டி நாம் செய்த பாவ வினையையும் ஒழிக்கும்.

யோகர் சுவாமிகள் 1875 ஆம் ஆண்டு மார்கழித் திங்களில் ஆயிலிய நாளில் மாவிட்டபுரத்தில் அம்பலவாணப் பெரியாருக்கும், சின்ன ஆய்ச்சிப் பெயர் கொண்ட அம்மைக்கும் தவப் புதல்வனாகத் திருவவதாரஞ் செய்தார். தமிழ் மொழியும், ஆங்கில மொழியும் நன்கு கற்றார். தேவார திருவாசகப் பாடல்களையும் படித்துத் தெளிந்தார். "கருவில் முளைத்த திரு" அல்லவா?

யோகர், செல்லப்பரை நல்லூர்த் தேரடியிற் கண்டு வணங்கியபோது, செல்லப்பர் யோகரைப் பார்த்தார்.

*"யாரடா நீ
தேரடா உன் உள்ளே"*

என்றார். இவற்றைக் கேட்டதும் யோகர் சுவாமிகளின் உள்ளத்தே

**சுவாமிகளின் உள்ளத்தே உண்மை ஒளி பிறந்தது. மெய்யடியாரானார்.**

உண்மையொளி பிறந்தது. மெய்யடியாரானார். கற்ற இளம் வாலிபரான யோகநாதன் கிளிநொச்சியில் அரசாங்க நீர்ப்பாசனத் திணைக்களத்திற் பொருட் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியவர். அப்பொழுது வயது இருபத்திரண்டு. இக்காலத்தில் வேதாந்த கேசரியான சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் வந்தார். யோகர் விவேகானந்தரைக் கண்டார். அவருரையைக் கேட்டார். கண்களுள்ளும், கருத்துள்ளும் செல்லப்பாச் சுவாமிகளையே இருத்திப் போற்றினார்.

1902 ஆம் ஆண்டில் எமது குருநாதர் தமது அரசாங்கக் கடமையைத் துறந்து செல்லப்பாச் சுவாமிகளின் அடிச்சுவட்டினையே தொடரும் சீடரானார். குருவின் நயன தீட்சையாலும், உள் உணர்வை எழுப்பும் யோக வழியாலும் யோகர் சுவாமியானார். யோகர் சுவாமிகளின் புகழ் ஈழமெங்கும் பரவியது. சுவாமிகள் யாழ்ப்பாணத்தவருக்குத் தரிசனங் கொடுத்துக் கொண்டே அருளாசி வழங்கினார்.

அடியேன் முதன் முறையாக 1938ம் ஆண்டில் திருநெல்வேலிக் கிராமத்தில் ஒரு சனியன்று காலை ஒன்பது மணியளவில் மாணவன்

(2ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியேனுக்குக் காட்சி அளித்த யோகசுவாமிகள்

## யோக குருநாதன்

### கட்டற்ற யோகியர்

ஒரு தினம் சாயங்கால நேரம் இருபாலையிலிருந்து கிழக்கு நோக்கி தொண்டைமானாறு என்னும் உப்பங்கழி ஆற்றினைக் கடந்து நாவற்குழி றோட்டில் ஒரு நண்பருடன் உலாச்சென்று கொண்டிருந்தேன்: எங்களுக்குப் பின்புறம் வேகமாக ஐந்தாறு பேர் வந்துகொண்டிருந்தனர். அவர்கள் செல்வதற்கு வழி விலகி நாங்கள் பாதை ஓரத்தில் நின்றோம். தூய வெள்ளாடை அணிந்து தூய வெண்மயிர்க் குடுமியுடன் எல்லோர்க்கும் முன் நடந்து வந்தவர் என் நண்பர் முதுகில் உரமாகத் தட்டி அடியேனைப் பார்த்து "எங்கேயடா செல்லுகிறீர்கள் பின்னேர உலாத்தோ" என்று உரத்துக் கேட்டார். "ஆம் ஆம் சும்மா உலாத்துகிறோம்" என சும்மா விருத்தலிற் சுகங் கண்ட ஞானமூர்த்தியிடம் அவரை இன்னாரென அறியாதே "சும்மா" மொழியிற் கூறினோம், சும்மாவின் பொருளறியா நாம், தமக்குரிய சிரிப்புடன் "நல்லாக உலாத்துங்கடா" என்று கூறி ஏதோ மிக்க துரித நடையில் பின்தொடர்வாருடன் சென்றார் அப்பெரியார். அதட்டி முதுகிலே தட்டி இப்படி முன்பின்னறியாதவரிடம் பேசியவர் யாரோ என்று வியப்பிலாழ்ந்தோம் இளமை மிடுக்கிலிருந்த நாம். எமக்குப்பின்னே இக்குழுவினருடன் சேர்வதற்கு ஓட்டமும் நடையுமாக வந்தவர் சொன்னர் "அவர் தான் கொழும்புத்துறைச் சுவாமியார்" என்று அவரைப் பணிந்து வணங்காது விட்டோமே என்று இருவரும் பெரிதுங் கவன்றோ மாயினும் வலியக் கிட்டிய பெரியார் தரிசனத்தை நினைந்து மகிழ்ச்சியிலாழ்ந்தோம். யோகர் சுவாமிகள் இப்படியிருந்தால் முற்றத் துறந்த முனிவர் பட்டினத்தடிகளார் எப்படியிருந்திருப்பாரென, திருவெண்காட்டடிகளாரையும் பத்திரகிரியாரையும் பற்றிக் கதைத்துக் கொண்டு இரு பாலை நோக்கி உளத்திலே பெரியார் புனித நினைவுடன் திரும்பினோம். "கடலருகே கண்டாலினிக்கும் கரும்பு" என்ற பாடலடியுடன் சுவாமிகளையுஞ் சம்பந்தப் படுத்தியபோது காற்றெனக் கட்டுப்பாடின்றிக் கவலையென்பதுதிவலையுமின்றித் திரியும் யோகியர் ஞானியரினினிய நினைவு மனத்தை உருக்கிற்று.

---

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## எங்கள் குருநாதன்.....

உருவத்தில் நின்று தரிசித்தேன். தெருவின் சுவாமிகள் நடக்கின்றார். பெருங் கூட்டம் பின் தொடர்கின்றது. சுவாமிகளைப் பார்த்தேன்.

"என்னடா படிக்கிறாய்?" என்றார். **"SENIOR"** என்றேன். **"YOU-SEE-NEAR"** என்றார். அப்பொழுது எனக்குத் தெளிவு ஏற்படவில்லை. தேர்வு எழுதிப் பெறுபேறு எதிர்பார்த்த காலம். சில நாள்களில் விடுமுறை களிக்கும் ஓர் உல்லாசப் பிரயாணமாகக் கடல் கடந்து போகவேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. தேர்விலும் சித்தி பெற்றேன். பல புதிய நாடுகளையும் அறியக்கூடியதாக அப்பிரயாணம் அமைந்தது. நான்கு மாதங்கள் பொருள் சேர்க்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. குருநாதனின்

"நல்லது **YOU-SEE-NEAR**" என்றதன் பொருள் தெளிவாகியது. மகிழ்ந்தேன்.

பின்னர் 1942 ஆம் ஆண்டில் ஒரு நாள் அதிகாலை ஆறுமணியளவில் கொழும்பு FLOWER ROAD இல், எனது அரச கடமையில் நிற்கும் போது எதிர்ப்பக்கத்தில் ஒரு பெரியவர் சிறு குறுநடை பயில்வதைப் போல நடந்ததைக் கண்டேன். தூய வெண் துகிலுடை, வெண் துகிற்போர்வை, ஒளிவீசும் வெள்ளி போன்ற நரைத்த தலைக்குடுமி, அழகொழுகும் வெண்தாடி, கண்டோரால் விரும்பப்படும் தன்மை வாய்ந்த உருவம், யாரென அறியாதவனாகவே அண்மையிற் சென்றேன். மெதுவாக அவரைத் தொட்டு,

"ஐயா பெரியவரே நீங்கள் எங்கே போக வேண்டும்?" என்று கேட்டேன். 'என்னடா' என்றார். அப்பொழுது என்னை அறியாதபடி ஓர் உணர்ச்சியோட்டம் ஏற்பட்டது. மகிழ்ச்சி ததும்பியது. அதன்பின் யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் குருநாதரைத் தரிசித்து மகிழ்வது வழக்கம். யான் எதையும் என்றுமே கேட்கவில்லை. ஆனால் குருநாதர் மற்றவர்களுக்குச் சொல்வது போல எனக்கு அருள்வாக்கியம்பியதுண்மை. அதை யான் உணரவில்லை. பின்னர் நிகழ்வுகள் ஏற்படும் போதே அவரை நினைத்துப் பதம் வணங்குவேன்.

1962 ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் என்னன்புத் தாயார் நோய்வாய்ப்பட்டிறந்தார். ஐந்தாம் நாள் தாயாரிடம் உடல் நீற்றோடு இந்தியா செல்லும் வழியில் சுவாமிகளைக் காணச் சென்றேன். கண்டேன்

நாதரை. கால் வலியால் நோயுற்றிருந்தார். சிரிப்புடன் 'வா' என்றார், ஒரு தோடம்பழத்தைத் தந்தார். "இனி என்ன? நீபழம், பழம்நீ" என்றார். இனி என்ன? என்ற அருளுரை என் தாயாரின் பிரிவையும், தந்தை முன்னதே இறந்தார் என்பதையும் காட்டி நிற்கின்றது.

கையில் பழத்தோடு இருந்தேன். "போய் வா" "சேதுவுக்குப் போகலாமே" என்று மேலும் அருளுரை வழங்கினார். "சேது செல்லும் வழியிலேதான் இங்குவந்தேன்" என்று சொன்னேன்.

"உனக்கென்ன? உனக்கென்ன கவலை? நல்லது" ஆசி கொடுத்தனுப்பினார்கள் சுவாமிகள்.

1964 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் ஆயிலிய நாளிரவு சமாதி எய்திய காலத்தில் நான் இலங்கையில் இருக்கவில்லை. எனக்குக் குருநாதர் அருளிய "நல்லது **YOU-SEE-NEAR**, உனக்கென்ன? உனக்கென்ன கவலை, பழம்நீ" என்னும் மகா வாக்கியங்கள் மந்திரங்கள்

---

### சுவாமிகள் சந்நிதி அருளும் சாந்தி

இது நிகழ்ந்த சில கிழமைகளின் பின் உயர்நீதிமன்ற விசாரணைக்கு நீதி அதிபராய் யாழ்ப்பாணம் வந்திருந்த அக்பர் என்னும் பெரியாரின் சொற்பொழிவு இருபாலைக் கலாசாலையில் நிகழ்ந்தது. அக்பர் என்னும் நீதி அரசர் மிகு இலகுவான தம் ஆங்கிலப் பேச்சைப் போலவே மிக எளிமையான உருவத்தினராகக் காட்சி தந்தார். உயரிய பண்பினர் இயல்பு

இதுதானே. தன்னைப்பற்றியறிய அவாவுறாத மனிதன் காசைக் கடவுளாகக் கும்பிட்டுக் கணநேரமும் ஆறுதலடையாது ஓடி ஆடித் திரிகிறானே. இவன் பிசாசு உளத்திற்கு என்று தான் அமைதி கிட்டுமொ தெரியாதே. ஆகா! யாழ்ப்பாணத்தைப் போலப் புண்ணிய பூமி எங்குளது? யோகர்சுவாமிகள் பிறந்து அருளாட்சிசெய்யும் பாகமல்லவா இது. எனது உத்தியோக தோரணையில் எத்தனையோ யோசனைகள் எழுந்த சிக்கல்கள் ஏற்படும். மனம் மிகக் குழம்பிப் பரபரப்படையும். அத்தகைய நேரத்திலே எங்கிருந்தாலும் யோகர்சுவாமிகளுடைய கொழும்புத்துறைக் கொட்டிலை நாடி வருவேன், அவர் சந்நிதியில் இருந்தாலே போதும். பேச்சுவார்த்தை எதுவுமின்றியே மனத்துட் சாந்தி குடிகொள்ளும் கனத்த இதயத்துடன் வந்தான் மனத்திருப்தியுடன் அல்லை தொல்லை நீங்கி ஆனந்த பரவசனாய்ப் புகைவண்டியிலேறுவேன். யோகர் சுவாமிகள் பிறந்த யாழ்ப்பாணத்துக்கு என்றும் தீங்குவராது. இந்த ரீதியில் அவர்பேச்சு நிகழ்ந்தது அது வெறும் உதட்டிலிருந்து வெளிவரவில்லை. ஒரு சமரச ஞானியின் உதய கீதமாய் அதுவந்தது. சுவாமிகளைப் ஊர் கண்வீசிய ஒளியை அவர் இதய உருக்கத்தை எழுத்தால் வெளிப்படுத்த இயலாது. கேட்டுக் கொண்டிருந்தோர் மந்திரத்தாற் கட்டுண்டவர் போலாயினர். நம்சயயத்தைச் சாராத ஒருவருவக்குச் சுவாமிகள் சந்நிதி தந்த அருளாசியிதுவாயின் சுவாமிகளின் சுத்தசன்மார்க்க உயரிய நெறிக்கு ஏதேனும் சான்றும் வேண்டுமோ? உள்ளொளி உள்ளார் இப்படியே வழிகாட்டுவர். குருடும் குருடும் குருட்டாட்டமிடும் இந்நாளில் குழந்தை உள்ளம் படைத்த இத்தகைய பெரியாரைப் பெற்றிருத்தற்கு யாழ்ப்பாணம் எத்துணை மாதவம் செய்திருக்க வேண்டும். நீதி அரசர் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த போது புத்தியை இறைவனடிக்குப் புகுத்திப் பத்தி வழியில் ஒழுகவேண்டிய அவசியம் தானாகவே விளங்கிற்று. விஞ்ஞானமென்றும் பகுத்தறிவெதறும் ஓலமிடும் இக்காலத்திற்கு இதனைவிட அவசியமானது வேறொன்றுமுண்டோ!

போல மனத்தகத்துள் நின்று பழச்சாறு போன்று இனிமை யூற்றுகின்றன.

*"ஆரறிவாரென்று அடிக்கடி சொல்லுவர்*
*தேரடிப் படியிலே சிங்காரமாய்க் கிடப்பான்*
*பேரறிவாளனென்று வேறெவருமே அறியார்*
*பித்தனிவனென்று உலகோர் ஏசுவர், பேசுவர்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அரங்கு



"சிவாயநம
என்று
சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம்
ஒரு நாளுமில்லை.
- ஔவைப்பாட்டி"

# சிவநாமம் சொல்லுவோம்!

"சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை" என்றார் ஔவைப் பிராட்டியார். ஆதலால் நாம் சிவத் தியானம் செய்தலும், சிவநாமம் சொல்லுதலும் அவசியமாகும். கலியுகத்தின் கடவுளை அடைய இலகுவான வழி நாம ஜெபமாகும். இதனையேதான் நமக்கு முன்னிருந்த மெய்யடியார்கள் விளக்கந் தந்து வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளனர். மெய்யடியார்களுடைய வழியிலே நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்து செல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

கலியுகம் மிகவும் கஷ்டமானது. இறைவன் நினைவே உண்டாகாத சூழ்நிலையிலே தான் எமது வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. பார்க்குமிடமெங்கும் பஞ்சப் புலன்களை இழுக்கும் கவர்ச்சிகளே நீக்கமற நிறைந்துள்ளன. இந்த இக்கட்டான நிலையிலே தான் இறைவனை வணங்க வேண்டும். நாம் வசிக்கும் யுகம் மிகக் கொடியதானாலும் இறைவன் கருணையினால் கடைத்தேறும் வழியை இலகுவாக்கி உள்ளான்.

ஆண்டவன் நாமத்தை உள்ளம் உருகி ஒரு முறை உச்சரித்தாலே போதும். ஆண்டவன் அருள் செய்ய ஓடிவந்து விடுவானாம். ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்ற ஓடிவந்து விடுகின்றான். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதினால் ஓதுபவர்களை நல்வழிப்படுத்துவது நமச்சிவாய நாமம். சிவ சிவ என்றிடத் தீவினை மாளும். சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார். சிவ சிவ என்னச் சிவகதி தானே. எமது வாழ்வின் குறிக்கோள் சிவகதியாகும். சிவ சிவ என்று சொல்லிவிட்டால் அதுவே கிடைத்து விடுகிறது. நமக்கு வேறு என்ன வேண்டும்?

*நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்*

ஒன்றும் இல்லையாதல் போல்வது திருவைந்தெழுத்து. அப்பாவத்தை நண்ணி நின்றறுக்கப் பாவம் முற்றும் அற்றொழிதல். விறகுக்குப் பாவம் எப்படியோ அழலுக்கு அஞ்செழுத்து அப்படியாகும்.

இறைவன் கருணைக்கடல். நமது பாவங்கள் யாவையும் போக்கி மோட்சத்தை அளித்து விடுவான். இப்படிப்பட்ட நாம ஜெபத்தைச் செய்ய மனம் ஈடுபட வேண்டுமேயானால் பக்தர்களின் சேர்க்கையால் தான் அது கிட்டும். சாதுக்களின் சங்கத்தை அடைந்தால் பகவானுடைய கல்யாண குணநலன்களை வருணித்து நமது பாவங்கள் யாவும் விலகும்படி செய்து, பகவானுடைய திருநாம ஜெபத்தை ஜெபிக்கும்படி செய்து விடுவார்கள்.

சாது சங்கம் இல்லாமல் தானாகப் புத்தகங்களைப் படித்தால் நாமத்தின் மகிமை விளங்காது. எங்களை எங்களுக்கு அறியத் தந்த எங்கள் குருநாதனாகிய யோகர் சுவாமிகளுடைய திருச் சமூகம் எப்பொழுதும் ஒரு சத்சங்கமாகவே விளங்கியது. தன்னை நாடி வந்தவர்களிடம் சிவபுராணம் படி சிவபுராணம் படி என்று சொல்வார்கள். சிலர் ஆமாம் போட்டுவிட்டுப் படிக்க மாட்டார்கள், பாராயணம் செய்யமாட்டார்கள் என்று கருதித் தாமும் சேர்ந்து சிவபுராணத்தை அங்கேயே படித்து முடித்து விடுவார்கள்.

பாக்கியசாலிகள் அதனையே குரு உபதேசமாக ஏற்று முன்னேறி உள்ளார்கள். கபீர்தாசர் படுத்துக் கிடந்த போது இராமானந்த சுவாமிகள் தவறுதலாகக் கபீரின் மீது காலை வைத்துவிட்டார். தவறுதலாக வைத்து விட்டதை உணர்ந்து 'ராம்' என்றார். கபீர் எழுந்து ஆனந்தக் கூத்தாடினார். குருநாதனுடைய திருவடித் தீட்சையோடு மந்திர உபதேசமும்

*நமச்சிவாயவே நானறி விச்சையும்*
*நமச்சிவாயவே நாநவின் றேத்துமே*
*நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே*

அவன் அருளால் தான் அவன் தாள் வணங்க வேண்டும். ஸ்ரீ பகவானுடைய அருளால் தான் மனிதர்களுக்குக் கஷ்டம் நீங்கி நன்மை ஏற்படுகின்றது. இதனை மக்கள் அடிக்கடி மறந்து விடுகின்றனர். சமீபத்தில் ஏற்பட்ட வன்செயல்களுக்குக் காரணம் யாது? என எல்லோரும் கேட்கின்றனர். இதற்கு விடை காண வேண்டியதும் நம் ஒவ்வொருவருடைய முக்கிய கடமையுமாகும். நமது வினைப்பயன் என்று எல்லாருமே சொல்லுகின்றனர். சமூகம் செய்த வினைப்பயனைச் சமூகமாகச் சேர்ந்து அனுபவிக்கின்றோம்.

இறைவன் எல்லாரிடத்தும் இருக்கின்றான். ஆனால் எல்லாரும் இறைவனிடத்தில் இல்லை என்பது புலனாகின்றது. இறைவன் மனத்தகத்தான் மாத்திரம் அல்லன். வாக்கிலும் உள்ளான். நாம ஜெபத்தின் மூலமே வாக்கில் இருப்பதை உணருகின்றோம். அவரது அருளைச் சம்பாதிக்கச் சாஸ்த்திரங்கள் பல வழிகளைக் கூறுகின்றன. அதில் பகவந்நாம சங்கீர்த்தனம் மிகச் சுலபமாயும் சிறந்ததாயும் உள்ளது.

நாம் ஒருவரின் பெயரைக் குறிப்பிடும் போது அப்பெயருக்குரியவரின் தோற்றம், உயரம், நிறம், குணம் எல்லாமே எமது உள்ளத்தில் நிழலிடுவது போல ஆண்டவனுடைய நாமத்தை நாம் ஜெபம் செய்யும் போதோ, உச்சரிக்கும் போதோ அந்த நாமத்துக்குரிய இறைவனுடைய திருத்தோற்றம், புகழ் முதலிய எல்லாமே உள்ளத்தில் தோன்றுகின்றன. ஆதலினாலே தான் நமது பெரியோர்கள் இறைவன் வேறு இறைவனுடைய நாமம் வேறு அல்ல என்று கூறி வைத்தார்கள்.

பகவானுடைய நாமத்தை வெட்கத்தை விட்டு உரக்கக் கூறிய மாத்திரத்திலே பகவானுடைய உள்ளம் குளிர்ந்து விடுகின்றது. அவன் கருணைக் கடல். நமது பாவங்கள் யாவையும் போக்கி மங்களத்தை அளித்து விடுவான்.

*"விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்*
*உண்ணிய புகில்அவை ஒன்று மில்லையாம்*
*பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை*
*நண்ணிநின் றறுப்பது நமச்சிவாயவே"*

---

விண்ணுற அடுக்கிய விறகு போல்வது பண்ணிய உலகினிற் பயின்ற பாவம். அவ்விறகின் வெவ்வழல் உண்ணிய புகில் அவை கிடைத்துவிட்டதென்று ஆனந்தம் கொண்டார்.

மகான்களுடைய சத்சங்கத்தில் இப்படி எல்லாச் சமயங்களிலும் உபதேசம் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. ஆனால் அவ்வுபதேசங்களை ஏற்றுக் கொள்ளும் பாத்திரங்கள் தான் இல்லை. அவ்வுபதேசங்களை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நாம் நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

புத்தகப் படிப்பு மாத்திரம் இறைநாமாவை ஜபிக்கும்படி செய்யாது. ஆதலால்தான் ஸ்ரீமத் பாகவத்தில் யமதர்மராஜா தனது தூதர்களைப் பார்த்து, "ஸ்ரீ பகவந் நாம ஜபத்தின் மகிமையைப் பாருங்கள். மகாபாவியான அஜாமிளன் கரை ஏறிவிட்டான்" என்று சொன்னார். இன்னும் எங்கள் பன்னிரண்டு பேருக்குத் தான் பகவந் நாமாவின் பெருமை தெரியும் எனக் கூறினார். அதாவது:- பிரம்மதேவன், நாரதர், பரமசிவன், ஜனத்குமாரர், கபிலர், மனு, பிரகலாதன், ஜனகர், பீஷ்மர், மகாபலி, வியாச புத்திரரான சுகர், நாங்கள் ஆகப் பன்னிரண்டு பேர்களும் அறிவோம் எனக் கூறினார். பீஷ்மரும் நம் ஜபத்தையே சர்வ தர்மங்களுக்கும் மேம்பட்டவை என்று கூறினார். பன்னிரு திருமுறை ஆசிரியர்களும் நமச்சிவாயத்துக்கே முதலிடம் கொடுத்துள்ளார்கள்.

நாடு, பதவி, புகழ், பொருள், குழந்தைகள் முதலிய விஷயங்களில் விருப்பமுடையவன் கடவுள் கிருபையால் எல்லா வகைகளும் கைகூடும் என்ற நம்பிக்கையுடன் பகவானுடைய திருநாமங்களை உச்சரித்தால் போதுமானது. அவனுக்கு எல்லா நன்மைகளையும் ஆண்டவன் அளிப்பார்.

லௌகீகமும், வைதீகமுமான செயல்களை எல்லாம் ஆத்மஸ்வரூபியான பகவானிடம் ஒப்படைத்து எப்பொழுதும் பிரணவத்தை ஜபித்துக் கொண்டிருப்பது தான் சன்னியாசிகளுடைய கடமை. விதிவிலக்கு என்பது அவர்களுக்குப் பாதகமன்று. ஆயினும், தன் காலில் விழுந்து வணங்குகிறவனுடைய நித்தியானந்தத்திற்காக இறைவன் நாமத்தைச் சன்னியாசி சொல்ல வேண்டும். வேறு வாழ்த்துக்கள் ஒன்றும் கொடுக்கக்கூடாது. யதிசங்கிரகம் கூறுவதும் இதுவே. ஆகையால், ஆத்மராமனான சன்னியாசிக்கும் கூட நாமசங்கீர்த்தனம் அவசியம் என்று தெளிவாகிறது.

இக்கருத்துக்களை யோகர் சுவாமிகள் தமது நற்சிந்தனைகளில் எவ்வளவு இலகுவாக எடுத்துரைத்துள்ளார்கள்.

*"நாமஞ் சொல்லுவோம் - சிவ*
*நாமஞ் சொல்லுவோம்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"....அச்சைவசமயத்தைத் தாமும் கடைப்பிடித்து ஒழுகிச் சரியை, கிரியை முதலிய பாதங்களைக் கடந்து, யோக பாதத்தில் நின்று, அதிலும் யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் ஆகிய பாதங்களையெல்லாம் கடந்து சிவஞானியாக நின்று எம்மனோரையெல்லாம் சைவத்தில் திளைக்கவைத்தவர் கொழும்புத்துறை யோகசுவாமிகள்."

# சைவம் வளர்த்த தவயோக சுவாமிகள்

"சைவசமயமே சமயம்" என்ற அடிப்படையான தத்துவக் கொள்கை ஒன்று உண்டு. அக்கொள்கை சிவம் என்று உண்டோ அன்று தொடக்கம் நிலவி வருவது. சிவம் அநாதியானது, சைவமும் அனாதியானது. "சைவசமயமே சமயம்" என்று பின்னர் அநுவதிக்கப் பட்டுப் பிரகடனப்படுத்தப்பட்டது. சற்சமயம் எது என்று தெளிந்து உணர முடியாமல் நின்றவர்களுக்குச் "சைவசமயமே சமயம்" என்று உண்மைத் தத்துவம் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை காலத்துக்குக் காலம் தேவை ஏற்படும் போது மெய்யடியார்கள், யோகியர், ஞானியர், துறவிகள், சுவாமிகள் முதலிய பலராலும் உணர்த்தப்படுகிறது. இலங்கை மாதா ஈன்ற சற்புத்திரர் சிலரும் இவ்வுண்மையை உணர்த்தியுள்ளனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவசமயஸ் தாபனஞ் செய்தார் என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். அச் சைவசமயத்தைத் தாமும் கடைப்பிடித்து ஒழுகி சரியை, கிரியை முதலிய பாதங்களைக் கடந்து யோகபாதத்தில் நின்று, அதிலும் யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் ஆகிய பாதங்களையெல்லாம் கடந்த சிவஞானியாக நின்று எம்மனோரை யெல்லாம் சைவத்தில் ஊன்றித் திளைக்க வைத்தவர் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள். யோகசுவாமிகள் சைவம் வளர்த்தார் என்றால் சிலர் எது எப்படி? என்றும் வினாவக்கூடும். அவ்வினா தவயோகியாகியும், சிவயோகியாகியும், சிவஞானியாகியும் வாழ்ந்த எங்கள் குலகுரு யோக சுவாமிகளைச் சரியாக விளங்கிக்கொள்ள முடியாதவர் வாயிலிருந்தே வரும். ஆனமையால் அவ்வினாவை விடுவோமாக.

செல்லப்பாச் சுவாமிகள் என்பதை யோகசுவாமிகள் பல இடங்களிலும் விளக்கியுள்ளார். லிங்க வழிபாட்டில் திருவடி வழிபாடு மிகப் பெருஞ் சாதனையாக அமைந்துள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் முதலிய சமயாசாரியர்களும் மெய்யடியார்களும் கைக்கொண்டொழுகிய திருவடி வழிபாடு சிவயோக சுவாமிகளால் இலங்கையில், பெரும்பாலும் யாழ்ப்பாணம், செங்கலடி முதலிய இடங்களில் ஒரு தெய்வீகப் பெரும் பொலிவைப் பெற்றுள்ளது. சங்கம வழிபாடு நித்தியமும் சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றே வந்துள்ளது.

இவற்றைவிட, சிவாலயதரிசனம் விரதானுஷ்டானம், பாதயாத்திரை, சிவநாம சங்கீர்த்தனம், சிவோகம் பாவனை, புராணபடனம், அன்னா பிஷேகம், அன்னதானம், மகேசுர பூசை, விருந்தோம்பல், திருமுறை ஓதுதல், திருமுறைப்பயிற்சி, திருமுறை வழிபாடு, ஓதுவாரை ஓம்புதல் முதலிய இன்னோரன்ன பல சைவக் கொள்கைகளுக்கு ஊக்கமும், புத்துயிர்ப்பும் புகுத்தியவர் எங்கள் சுவாமிகளே! மேலே கூறிய சிறப்புக் களையும் இவை போன்ற சைவக்கொள்கைகளையும் எம்மனோர்க்கு நன்கு ஒழுகிக் காட்டியுள்ளார் சுவாமிகள். இவைகள் யாவும் சுவாமிகள் காலத்தில் நன்கு விளங்கியது போலப் பிற்காலத்தும் நன்கு விளங்க ஆங்காங்கு நல்ல ஏற்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளார்கள். இவ்வேற் பாடுகளைப் பல மெய்யன்பர்கள் முன்னின்று நடத்திக்கொண்டு வருகின்றார் கள். இன்னும், "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" ஆதலாலும், "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" ஆதலாலும், எண்ணையும், எழுத்தையும் மட்டுமன்றி அமையப் பாடசாலைகளைப் பெருகும்படி

சைவசமயிகள், அநுட்டான சீலர்கள், அவர்களது வாழ்க்கையில் சில அநுட்டானங்கள் நித்திய கருமமாய் உள்ளன. இந்த நித்திய கருமம் சரியாவான்கள், கிரியாவான்கள், யோகாவான்கள், ஞானாவான் கள் ஆகிய எல்லோருக்கும் பொருந்தும். ஆனால் படி ஏற ஏறச் சில சில அநுட்டானங்கள் தாமாகவே நீங்கிவிடும். நித்திரை கொள்ளுவதன் முன் எவ்வளவோ கவனமாகத் தனது கையில் வைத்திருந்த ஒரு பொருளானது நித்திரை கொள்ளக் கொள்ள மெல்ல மெல்லத் தானாகவே நழுவிவிடும். பூரண நித்திரையில் கைப்பொருள் ஒன்று உண்டு என்பதே உறங்குவோனுக்குத் தெரியாதல்லவா? இது போலச் சமயப்படிகளிலும் சில சில அநுட்டானங்கள் தாமாகவே விலகிவிடும். பின்பு அவற்றை அவர்கள் அநுட்டிக்கவேண்டியதில்லை. ஆனால் உலகினர்க்காக அவற்றை உணர்த்த வேண்டிய ஒரு சந்தர்ப்பம் வருமாயின் தாமாகவே உணர்த்து வார்கள். இவர்களின் தன்மை போன்றவரே யோகசுவாமிகள். சுவாமிகள் சில சில சந்தர்ப்பங்களில் அநுட்டானங்களைக் கண்டிப்பாக அநுட்டித்து முண்டு. சில சில சந்தர்ப்பங்களில் முற்றுந்துறந்த முனிபுங்கவராக வாழ்ந்து காட்டியதும் உண்டு. சைவசமயமே சமயமென்பதும் அச்சமயம் மறுசமயங்களைத் தன்னுள் அடக்கிய ஒரு பூரண சமயமென்றும் அதனால் மறுசமயங்களை இழிவு படுத்துதலாகாதென்பதும் மறுசமயங்களிலேயும் சைவத்தின் தத்துவத்தைக் காணலாமென்றும், அதனால் சமயவாதம் வேண்டியதில்லை என்றும் எல்லாம் எப்போதோ முடிந்த முடிபென்றும் எல்லோருக்கும் நன்கு விளக்கியுள்ளார். இதனாலேயே பௌத்தர்கள், கிறிஸ்த்தவர்கள், மகமதியர்கள் முதலிய மறு சமயிகளும் யோக சுவாமி களைத் தமது குருவாகவும் கொண்டு வாழ்ந்தார்கள், வாழுகிறார்கள், வாழ்வார்கள். அவர்களின் மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் அளிக்கிறது. யோகசுவாமிகளின் இனநலம் எல்லாப் புகழ்களையும் அவர்களுக்கு ஈகின்றது. இது ஒன்றே யோக சுவாமிகள் ஏற்றி வைத்த ஞானதீபத்தின் பேரொளி என்று துணிந்து கூறலாம். "யாதொருதெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே மாதொருபாகனார் தாம் வருவர்" என்ற சித்தாந்த உண்மையை உலகினர் அறியவைத்த சிவயோகர் எங்கள் சுவாமிகள்.

சைவசமயத்தில் குரு லிங்க சங்கம வழிபாடுகள் மிகமுக்கிய மானவை. சுவாமிகள் இவற்றை நன்கு வாழ்ந்து காட்டி விளக்கியுள்ள தோடு, எம்மனோருக்கு உறுதுணையாக நின்று, எம்மையும் அவ்வனு பவத்திற் செலுத்தியுள்ளார். குருவருளாலேயே ஞானம் கைகூடும் என்பதை அவரின் வாழ்க்கை நன்கு விளக்குகின்றது. அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைத் தந்து உபதேசஞ் செய்தவர் நல்லூர்ச்

செய்துள்ளார்கள் சுவாமிகள். அவருடைய இப்பணியால், அநேக வறிய பிள்ளைகள் கல்வியில் முன்னேற ஏது உண்டாகியுள்ளது. ஏன்? செல்வப் பிள்ளைகளுக்கும் நல்ல வாய்ப்பு உண்டுதானே! இனி, பல இடங்களில் பேணுதல் குறைந்திருந்த திருக்கோயில்களைப் புதுக்குவித்தும், மகாகும்பாபிஷேகம் செய்வித்தும், நித்திய நைமித்திக பூசைகள் முட்டின்றி நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வித்தும் வந்துள்ளார்கள் சுவாமிகள். சில இடங்களில் மடாலயங்களை அமைப்பித்துச் சைவ அநுட்டானங்கள் அங்குக் கிரமமாக நடைபெற ஒழுங்குகள் செய்வித் துள்ளார்கள்.

இவைகளாலும், இவைபோன்ற பிற செயற்கருஞ் செயல்களாலும் சுவாமிகள் சைவம் வளர்த்தார்கள். இவற்றுள் சிவதொண்டே மேலான தொண்டென்பதை எல்லோரும் உணரச் "சிவதொண்டன்" எனும் ஞானபானு இதழை ஆரம்பித்து வைத்தமை மிக மிகப் போற்றற் பாலதாகும். சைவர்களுக்குச் சைவ விஷயங்களை மாத்திரம் தாங்கி வரும் ஒரு பத்திரிகை இல்லாத குறையை, எங்கள் சுவாமிகள் பெரிதும் நீக்கியுள்ளார்கள். தாம் இருக்கும் வரைக்கும் சிவதொண்டனுக்குத் தாமும் விஷயதானஞ் செய்து ஏனைய கற்றுணர்ந்த மேலோரையும் விஷயதானஞ் செய்யத் தூண்டியுள்ளார்கள். இதனால் சிவத்தொண்டு என்றும் நின்று நிலவக்கூடிய ஒரு செயற்கரிய பெருஞ் செயலை எங்கள் சுவாமிகள் செய்து எங்களையுஞ் சிவத்தொண்டில் வழிநடத்தி வந்துள்ளார்கள். இவ்வரும்பெருஞ் செயலால், சிவதொண்டன் இன்று முற்றி மூதுணர்வூறி, கற்றுணர்ந்த மேலோர்கள் கரங்கூப்பி வணங்கவும். சிரந் தாழ்ந்து சிந்தனைத்தேன் பிலிற்றவுஞ் செய்த சுவாமிகளுக்கு, யாஞ்செய்யத்தக்க கைம்மாறொன்றுண்டோ? சைவம் வளர்த்த தவயோக சுவாமிகள் வாழ்க என்று வாயார வாழ்த்தி மனமாரப் போற்றுவோமாக.

சிவயோக சுவாமிகளுக்குத் திருமுறைகளில் அளவுகடந்த பற்றுண்டு. இப்பெருவிருப்பால் திருமுறைப் பாசுரங்களைப் பாடியும் பாடுவித்தும் வந்துள்ளார்கள். பொன்பெற்றுக் கொடுத்த வரலாற்றைப் பலரும் அறிவார்கள். "பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப் போகமுந்திருவும் புணர்ப்பானை"த் தம்மகத்தே தாங்கிய தவயோக சுவாமிகளின் திருமுறை வழிபாட்டைக் கண்டு தாமும் திருமுறைகளிற் பற்றுவைத்துப் பண்ணோடு பயின்றவர்களும் உண்டு. திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு பாடினால் அப்பண்ணிசை இறைவனோடு இசைவிக்கும். இசை இறைவனோடு இசைவிப்பதுவேயாதலால், பண்ணிசை இறைவனைச் சம்பந்தப்படுத்தும் ஒரு கருவியாகவே அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடி

## – திருவள்ளுவரும் யோகர்சுவாமிகளும்

திருவள்ளுவர் திருக்குறளின் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்துள் இறைவன் திருவடிப் பெருமையைக் கூறுகிறார். கல்விக்குப்பயன் "வாலறிவன் நற்றாள்" தொழுத லென்றும், "மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்" என்றும், திருவடி சேர்ந்தார்க்கு ஒரு காலத்திலும் இடும்பை இல்லை என்றும், திருவடி சேர்தலால் மாத்திரம் மனக்கவலை மாற்றலாகும் என்றும், திருவடிசேராவிடின்பொருள் இன்பங் களால் தாக்கப்படாதிருத்தல் முடியாது என்றும், திருவடியை வணங்காத தலையும், வாழ்த்தாத வாயும், திருவடியின் புகழைக்கேட்காத செவியும், அதன் அழகைக் காணாத கண்ணும், திருவடிக்குப் பணிசெய்யாத கையும் ஆன்மலாபத்தைத் தேட உதவிபுரிகின்றன வல்ல வாகலின் இவை பிரயோசனமற்றவையே என்றும், இறைவனடி சேர்ந்தவர் பிறவிப் பெருங்கடல் நீந்துவர், மற்றையோர் பிறந்திறந் துழல்பவரே என்று கூறுகிறார்.

இப்படியாகப் பழைய காலத்துத் தமிழ் முனிவராகிய அவர் கூறிச் சென்றார். எச்சமயத்தவரும் தம் சமயக் கொள்கைகளைத் திருவள்ளுவர் திருக்குறளின்கண் சொன்னாரென்று சொல்லும் வண்ணம் உண்மைகளை எடுத்துரைத்தார். எனினும் இந்து சமயத்தவரே திருவடி வழிபாட்டைச் சிறப்பாய்க் கொள்வதற்கும், கோயில் வழிபாடாயமைத்தற்கும் தேவார திருவாசங்களும் திவ்விய பிரபந்தங்களும் துணைபுரிகின்றன. சமய சாஸ்திரங்களும் திருவடியின் பொருளை விளக்கி உதவுகின்றன. திருவடி வழிபாடு சிவலிங்க வழிபாடுபோல் அமைந்திருக்கிறது. யோகசுவாமிகள் திருவடிவழிபாடு எங்களிடம் வளரும் படிக்குப் பலவழிகளால் அருள் புரிந்தார்கள். எனினும் "சாதிசமயமில்லாதான் எங்கள் குருநாதன்" என்பது சுவாமிகளின் திருவாக்கு. "உலகமுவக்க....." எனத் தொடங்கும் பெரும் உபதேசத்துள் "ஒன்றேதெய்வம், ஒன்றேயுலகம் .......... சாதி சமயம் யாவும் உனக்கில்லை" என்று கூறுகிறார்கள். இப்படிச் சர்வசமயசமரசம் சுவாமிகளது திருவாக்குகட்குள் அமைகின்றது. இனி ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் வாழ்வே உண்மையான சமய வாழ்வெனச் சுவாமிகள் திருவள்ளுவர் வழிநின்று கூறுகிறார்கள்.
முறை நடத்திவந்த திருவடி பூசைத்தினத்தன்று சுவாமிகளின் திருவடிக் கலப்பு ஆயது என்றும் சிவதொண்டனின் வைகாசி இதழில் கூறுவதை அவதானித்தோம். "தில்லைமூதூராடிய திருவடி பல்லுயிரெல்லாம் பயின்றனனாகி" என்றும் திருவாசகம் நடராசப் பெருமானுடைய திருவடி எல்லா உயிர்களிலும் விளங்கிக் கொண்டிருக்கிற தென்றுகூறுகிறது.

கயிலையில் விளங்குவதாகிய திருவடியே எங்களொவ்வருவருடைய சித்தத்திலும் விளங்கிக் கொண்டிருக்கிறதென நற்சிந்தனை தருகிறது.

*"சேண் பொலியும் திருவடியே*
*சித்தத்தி லெப்போது முண்டு*
*வீண்காலம் போக்காதே – சின்னத்தங்கம்*
*வேண்டிப் பணிந்திடுவாய்."*

ஆன்மலாபம் திருவடிபணிதலால் ஆகுமென்றும், அப்பயன் சீவன் முத்தராத லென்றும் இரு நற்சிந்தனைகள் தருகின்றன.

*"ஆதார ஆதேயமான அப்பொருளின்*
*பாதார விந்தம் பணிதல்பயனே"*

*"அந்திசந்தியும் ஆசான் திருவடி*
*சிந்தை செய்பவர் சீவன்முத்தரே"*

திருவடிக் கலப்பின் மூன்று மாசங்களின் முன், சுவாமிகளிடம் கண்ட சிலவற்றை இங்கே கூறுவாம். சைவ சமயிகளது சிவவழிபாட்டிற்கு மிகச் சிறந்த திருநாளாகிய மார்கழித் திருவாதிரையன்று இருமுறை ஒரு தேவாரத்தைச் சுவாமிகள் படித்தார்கள் அது மிகச்சிறந்த தேவாரம். நடராசப்பெருமான் திருவடியைப் பூசித்தலால் யாம் பாவம் நீங்கப் பெறுவோம் என்று எமக்குக் கருணைகூர்ந்து திரு ஞானசம்பந்தப் பெருமான் பாடித்தந்த தேவாரம் அது. அந்தத்தேவாரத்தை ஓதிச் சுவாமி கள் உய்திவழி காட்டினர். வேதாகம வழிவந்த சைவவழிபாட்டை மிகவும் பிரதி பலிப்பதாகிய மேன்மை மிக்க அந்தத் தேவாரம்:-

---

*"கந்நாங்கெரி யோம்பிக் கலியைவா ராமே*
*"ஒழுக்க முயிரினு மோம்பப் படுமென*
*வழுத்திய பெரியவன் மறைமொழி தன்னை*
*அழுத்த அழுத்த ஆனந்த ஈஸ்வரன்*
*வழுத்தொணா மலரடி வழுத்திவாழ் [illegible]"*

எனவரும் நற்சிந்தனையுள் "ஒழுக்க முயரினுமோம்பப்படும்" என்ற வேத வாக்கைத் திருவள்ளுவர் எடுத்துக் கூறினாரென்றும்; இந்த உண்மை மனதில் பதிந்து உயிரில் ஊறி வாழ்க்கையில் பரிணமிக்கும் போது "பேராது நின்ற பெருங்கருணைப் பேராறுடன்" ஒன்றி நடராசப்பெருமான் திருவடியை வழுத்தாமல் வழுத்துவதாகின்ற தென்றுங் காண்கிறோம்.

இந்த நற்சிந்தனை திருவடி வணக்கத்தில் இருபெரு முனிவர்கட்கும் உள்ளக் கருத்தொற்றுமை இருப்பதைக் காட்டுகின்றது. பின்வரும் உள்ளம் உருகித் தருவாயருள் என்று வேண்டுகின்ற நற்சிந்தனையிலும் சுவாமிகள் காட்டும் இப்படியான உள்ளக்கருத்தைக் காண்கிறோம்.

*"ஈவது கடைபிடித் தென்று மொழுகவும்*
*நோவது பேசாது நோன்பைப் பிடிக்கவும்*
*சாவது வந்தாலும் உண்மையிற் றழைக்கவும்*
*தேவர் தொழு மிலங்கைத் திருநகரானே"*

திருக்குறள் சகல சமயத்துக்கும் உடன்பாடாயமைந்திருக்கிறது. நற்சிந்தனை "சகலசமயத்துக்கும் சம்மதங் கொடுப்போம்" என்கிறது. திருவடி வழிபாடும் எச்சமயத்தவரும் கைக்கொள்வதற்கு ஏற்றதே. சுவாமி கள் பல வருடங்களாகப் பயிற்சி வந்த திருவடி வழிபாடு திருவடியைப் பூக்களால் அலங்கரித்து அர்ச்சித்துக் கற்பூர தீப ஆராதனையுடன் சைவசமய வழிபாட்டுமுறையில் செய்யப்பெறுவது சிவநெறியினர்க்குக் கிடைத்த பெரும்பாக்கியமாகும்.

"யானெனதற்ற இடமேதிருவடி" என்றார் குமரகுருபர சுவாமிகள் என்றும், மாணிக்கவாசக சுவாமிகள் ஞானாசிரியரின் ஆஞ்ஞை வழிநின்று திருவடி வழிபாடு ஆற்றினாரென்றும் சிவதொண்டன் சென்ற வைகாசி மாச இதழில் கூறுவதை அவதானித்தோம். "எல்லாம் சிவன் செயல்" "அவனன்றி ஓர் அணுவுமசையாது" சாட்சியாயிருந்து பொருந்திய வண்ணம் வாழ்வதே எம் கடன் என்ற அறிவைப்பெறுதலே திருவடித் தியானத்தின் பயன் எனக் காண்கிறோம் திருவடித் தியானம் சிவதொண்ட ராய் எம்மை வாழச்செய்யும். மேலும் பல்லாண்டுகளாக ஆண்டுக்கொரு

*செற்றார்வாழ் தில்லைச் சிற்றம்பல மேய*
*முற்றாவெண் டிங்கள் முதல்வன் பாதமே*
*பற்றாநின் றாரைப் பற்றா பாவமே"*

இதில் கற்றாங் கெரியோம்பி யென்பதால் ஓமாக்கினி வழிபாடு சிறப்புற்றுத் தோன்றுகிறது. கற்பூரதீப ஆராதனை வழிபாட்டில் யாம் இதைக் கைக்கொள்கின்றோம். முதல்வன் பாதமே என்பதால் திருவடி வழிபாடாகின்றது. திருவடி வணக்கத்தால் பாவம் நீங்கப் பெற்றுச் சீவன் முத்தராதற்குப் பக்குவராவோம் என்பதைத் தருகின்றது இத்தேவாரம்.

சிறந்த இத்தேவாரத்தைச் சுவாமிகள் அன்று அதிகாலையில் எழுந்தவுடன் படித்தார்கள். முகம் கழுவி விபூதிதரித்தார்கள். கற்பூர தீப ஆராதனை சுவாமிமுன் காட்டப்பட்டது. அப்போதும் இந்தத் தேவாரத்தை அட்சர சுத்தியுடன் உச்சத் தொனியிற் பாடினார்கள். சுவாமிகளுடைய சந்நிதானம் சிவலோகமாகவேயிருந்தது.

மலர் கொண்டு அலங்கரித்தும் கற்பூரதீபங் காட்டியும் திருவடி வழிபாடு காலையும் மாலையும் ஆதல் பல வருடங்களாகக் கொழும்புத் துறை ஆச்சிரமத்திலும் யாழ்ப்பாணச் சிவதொண்டன் நிலையத்திலும் சுவாமிகளின் அனுக்கிரகத்தால் அமைந்து விட்டது. இப்போது செங்கலடிச் சிவதொண்டன் நிலையத்தும் அவ்வண்ணமே நடைபெறுகின்றது. சிவ தொண்டன் நிலையங்களில் நடக்கும் மாசயாகங்களுக்குத் தூர இடங்களி லிருந்தும் அநேகர் வந்து இந்த வழிபாட்டைப் பயின்று செல்கின்றனர். இந்த மாச யாகங்களில் பிரதானமாயுள்ளது தியானத் தமர்ந்து தியானத்தைப் பழகுதலாகும்.

மாசயாகங்களிலே சிவதொண்டன் நிலையத்திலுள்ள புராண மண்டபத்தில் திருமுறைகளை ஓதுதலும் நற்சிந்தனைகளை ஓதுதலும் சிறந்த அம்சமாயமைந்திருக்கிறது. ஓதப்பெறுவனவற்றைச் சிரத்தையுடன் கேட்டுச் சிந்திப்பவர்கட்கு மனம் ஒருமுகப்பட்டுத் தியானத்துக்குத் தகுந்த பக்குவத்தைப் பெறுகின்றது. இந்தமனத்தின் இடத்து மற்றைய நேரங்களில் பல முகப்பட்ட எண்ணங்கள் அலை அலையாய்ச் சதா எழுந்துகொண்டே யிருக்கும். இப்படித் திருமுறைகளாலும் நற்சிந்தனைகளாலும் ஒருமுகப் படுத்தப்பட்ட மனத்துடன் தியான மண்டபத்தையடைந்து திருவடியைப் புறவழிபாடாய்க் கும்பிட்டு தியானத்திலமர்வோர்க்குப் படிப்படியாய்த் தியானம் சித்தித்து வருகிறது. இது குருபரன் கிருபையாலாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே
இரவுபகல் காணேனடி.
- யோகர் சுவாமிகள்"

# பொல்லாங்கு தீர்க்கும் திருப்பாட்டு

சுவாமி இத்திருப்பாட்டைத் தமது அன்பர்களில் ஒருவரான இராமலிங்கம் அவர்களது இல்லத்தில் வைத்துப் பாடினார். இராமலிங்கம் என்பவர் கொழும்புத்துறை விதானையார் திருநாவுக்கரசு அவர்களின் உடன்பிறந்தார். பிள்ளைப் பிராயந்தொட்டே சுவாமியிடம் அன்பு பூண்டொழுகியவர். அவரைப் போன்றே அவரது பிள்ளைகளும் சுவாமியிடத்துப் பெரும் பக்தி கொண்டவர்கள். அவரது 'குரு வாசம்' எனும் திருநாமம் சூட்டப்பட்ட திருநெல்வேலி இல்லத் துக்குச் சுவாமி இடையிடையே எழுந்தருள்வார். அவ்வாறு எழுந்தருளிய ஒரு சந்தர்ப்பத்தில் இப்பாடலை அருளினார். இராமலிங்கம் மகளிர் சுவாமி பாடப் பாடப் பக்குவமாக எழுதி வைத்தனர். அவர்கள் தமக்கு வாய்த்த அருட்பிரசாதமாக இத்திருப் பாட்டைப் பேணி வந்தனர். இராமலிங்கம் மகளிரைச் சாட்டாகக் கொண்டு சுரந்த இவ்வருள்பாட்டு மன்பதை அனைத்திற் கும் பொதுவானதேயாகும்.

இத்திருப்பாட்டு பொல்லாங்கு தீர்க்கும் கவச மந்திரமாகும். இக்கவச மந்திரத்தின் முதற் செய்யுள் நல்லூரான் திருவடித்தியானம். இறுதிச் செய்யுள் யோகநாதன் ஆணைமொழி, இரண்டாவது செய்யுளும், ஈற்றயற் செய்யுளும் அபயமொழிகள், நடுநாயகமாக நின்ற இரு செய்யுள்களும் காவலுரைக்கும் கவசமொழிகளாகும்.

### நல்லூரான் திருவடித்தியானம்

பெரியோர்கள் தம்மை நம்பின பேருக்கு வாழ்வளிக்க நாடும் போது திருவருளை முன்னிட்டுக் காரியப்படுவதே இயல்பாகும். சுவாமிகள் 'யோகநாதன்குடி' க்கு அருள் பாலிக்கத் திருவுளம் பற்றிய போது முதலில் நல்லூரான் திருவடியைத் தியானிக்கின்றனர்.

*"நல்லூரான் திருவடியை*
*நான் நினைத்த மாத்திரத்தில்*

திசையும் எதிர் தோன்றும் என்பது உறுதியேயாகும். "பரப்பற்றார்க்கு உரியோனே" என்பது அருணகிரி வாக்கன்றோ "உன்னை முழுதும் ஒப்புக் கொடுத்தால் அன்னையைப் போல ஆதரிப்பாரே" என்பது சுவாமி வாக்கன்றோ.

### காவல் மொழி

திருவடிமறவாச் சீருடையாளரான சுவாமி தம்மைத் திருவடியிடத்துக் கையடையாக ஈந்து கிடக்கும் இயல்பு நிலையினின்றும் காவல் மொழி உரைக்கின்றனர். அக்காவல் மொழி கந்தபுராண உண்மையை உள்ளீடாகக் கொண்ட மறைமொழியாகும்.

*"தேவர் சிறை மீட்ட*
*செல்வன் திரு வடிகள்*
*காவல் எனக் காமெடி - கிளியே*
*கவலையெல்லாம் போகுமெடி."*

*"எத்தொழிலைச் செய்தாலென்*
*ஏதவத்தைப் பட்டாலென்*
*கர்த்தன் திருவடிகள் - கிளியே*
*காவல் அறிந்திடடி."*

கந்தபுராணக் கலாச்சாரத்தில் ஊறிய நம்மவரின் உயிரோசை இதுவே. "தேவர் துயர்தீர்க்க வேலெடுத்து விளையாடிய செல்வன் இன்று வடிவேற் பெருமானாக நல்லூர்த் திருப்பதியில் வீற்றிருக் கின்றார். அவர் எமது வினைப்பகையை நீக்க விருது கட்டி நிற்கிறார்". இதுவே வாழையடி வாழையாக நம்மவரின் இரத்தத்தில் கலந்தோடும் உணர்வு. இதுவே நம்மனோரின் தசையில் செறிந்த அறிவு.

*எல்லாம் மறப்பேனடி - கிளியே*
*இரவுபகல் காணேனடி."*

இத்தியானம் தியானமுயற்சி எதுவும் வேண்டியிராத தியானமாகும். தியானிக்க நினைத்த அக்கணத்திலேயே தியானானுபூதியிற் பொருந்தும் கைவல்லிய தியானமே இது. இத்தியானானுபூதியில் நல்லூரான் திருவடி நினைவொன்றைத் தவிர மற்றைய நினைவெல்லாவற்றையும் மறந் திருக்கும் ஏகாந்தமோனம் அமைகிறது. இரவு பகல் என்னும் சொற்களை ஞானியர் இன்பம், துன்பம் என்னும் பொருள்களில் வழங்குவர். ஆகவே இன்பதுன்பம் எனும் மாயையினின்றும் நீங்கி, திருவடி ஞானத்தில் நிலைப் பதை 'இரவுபகல் காணேனெடி' எனும் வாசகம் உணர்த்துகிறது. எனவே திருவடிஞானத்திற் பொருந்தும் ஏகாந்த மோனத்திலிருந்து இத்திருமந்திரம் எழுகின்றது.

### அபயமொழி

இத்திருப்பாட்டின் முதலிலுள்ள அபயமொழி "ஆன்மா அழியாது" என்ற ஞானமொழியைப் பற்றி நிற்பது. அந்த ஞானமொழி மூலத் தானத்தில் ஞானவேலாயும், தேர்முட்டிப் படியிலே ஞானதேசிகனாயும் எழுந்தருளியுள்ள நல்லூரானின் திருவாய் மொழியாகும்.

*"ஆன்மா அழியாதென*
*அன்றெனக்குச் சொன்னமொழி*
*நான்மறந்து போவேனோடி - கிளியே*
*நல்லூரான் தஞ்சமெடி."*

இத்தஞ்சம் ஆவது அழிவதில்லா ஆன்மாவே நாம் என்ற ஞானத் தெளிவில் விளையாடுவதாகும். இது துன்பத்திற்கு அஞ்சிப் புகலிடம் தேடும் தஞ்சமன்று. எதனையும் நச்சிப் புகும் தஞ்சமுமன்று. இது தேவர்களின் தஞ்சத்தினும் மேம்பட்டது. தேவர்கள் தமக்கேற்பட்ட இன்னலின்று தப்புதற்கும், தம் போகத்தைக் காத்துக் கொள்ளவும் தஞ்சம் புகுந்தனர். அறுமுகச் சிவம் வெளிப்பட்டு அசுரருக்கெதிராய்ப் போர்புரியும் பொழுதிலும் அவர்கள் மனது ஒருமையடையவில்லை. சூரபன்மன் அவர் களையெல்லாம் விழுங்குதற் கெண்ணிப் பாய்ந்த போது அஞ்சிக் குலைந்து ஓலமிட்டு அரற்றுகின்றனர். இத்தகைய சஞ்சலம் மிக்க தஞ்சமன்று இத்திருமந்திரத்திலுள்ள தஞ்சம். ஞானத் தெளிவிலமைந்த இத்தஞ்சம் பரபரப்பேதுமில்லாதது. கைக்குழந்தை தாயின் அரவணைப்பை நம்பியிருப்பது போன்ற இயல்பான ஒப்படை இது. இத்தகைய பரபரப்பில் லாத முழுமையான ஒப்படையின்போது ஈராறு அருள் விழியும், மாமுகங் களாறும் விரிகிரணம் சிந்தப்புனைந்த திருமுடிகளோராறும் எந்தத்

நல்லூரான் காப்பு என்பதே நம்மனோரின் மூக்கு முரல்வதுமாகும். இதனை உறுதி மொழியாகக் கொள்பவர் நரகத்தில் கிடந்தாற்றான் என்ன? அங்கும் நல்லூரான் காப்புத் துணை நிற்கும்.

### அபயமொழி

காவல்மொழிக்கு முன்னர் ஓர் அபயமொழி உள்ளது போல் பின்னரும் ஓர் அபயமொழி இடம் பெற்றுள்ளது.

*"பஞ்சம் படை வந்தாலும்*
*பாசிரெல்லாம் வெந்தாலும்*
*அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே*
*ஆறுமுகன் தஞ்சமெடி"*

திருவடியைத் தெண்டனிட்டுக் காப்பு வேண்டியது போன்று காப்பு வேண்டிய பின்னரும் திருவடியையே தெண்டனிட்டுக் கிடக்கும் பான்மையை இது உணர்த்துகிறது. முதலில் உரைத்த அபயமொழிக்கும் முடிவிலுரைத்த அபயமொழிக்கும் ஓர் வேறுபாடிருப்பதும் உற்று நோக்கத்தக்கது. முதலிலுள்ள அபயமொழி நான் மறந்து போவேனோடி நல்லூரான் தஞ்சமெடி என ஒருமையிற் கூறும் தஞ்சமாகும். முடிவிலுள்ள அபயமொழி அஞ்சுவமோ நாங்களெடி ஆறுமுகன் தஞ்சமெடி எனப் பன்மையிற் கூறும் தஞ்சமாகும். முதலிற் கூறும் தஞ்சம் ஞானியின் தஞ்சம். அஃது இன்ப துன்பங்களைக் கண்ணாற் காணுதலுமில்லாத நிலையினின்றும் விளைந்த தஞ்சமாகும். பின்னர்க் கூறும் தஞ்சம் ஞானியொருவர் தாம் வாழ்விக்க நாடும் அன்பரையும் சேர்த்துப்புகும் தஞ்சம். அத்தஞ்சத்தின் போது அடியரை வலிந்து தாக்கும் பஞ்சம், படை போன்ற பகைகள் உள்ளன. ஆனால் நல்லூரான் திருவடியைக் கவசமாகக் கொண்ட அடியரை அவை யாது செய்யும்? பருந்து மேலே வட்டமிடுகிறது. ஆயின் அன்னப்பறவையின் இறக்கைகளுள் கிடக்கும் போது அஞ்சுவானேன்?

### ஆணைமொழி

திருவடி ஞானத்திற் பொருந்திய ஏகாந்த மோனத்தினின்றும் எழுந்ததே இக்கவசமந்திரம் என முன்னர்க் கூறப்பட்டது. குறைவிலா நிறைவான மெய்ப்பொருட் சம்பந்தத்தினின்றும் தோன்றிய இத்திருமந்திரம் நிறைமொழியேயாம். இந்நிறைமொழியை மொழிந்த சுவாமி நிறைமொழி மாந்தராவார். நிறைமொழி மாந்தரான சுவாமி தாம் சொன்ன திருப் பாட்டைத்தும் சொன்னால் பொல்லாங்கு தீரும் என ஆணையிட்டு உரைத்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இந்துக் குரல்

**HINDU VOICE**

பங்குனி - சித்திரை 1999

## நமக்கு இவரே சூரியன்

இருள் படர்ந்த வேளையிலே சிறு கீற்றளவு ஒளியாவது நமக்கு வேண்டப்படுகிறது. எமது இருள் சூழ்ந்த வேளையில் எமக்கு எழு ஞாயிறாகத் தோன்றிய மகா ஞானி யோகசுவாமிகள். அந்த எழுஞா யிறு இன்றும், இனியும் நமக்கு ஒளிதந்து உயிரூட்டும் ஆற்றல் கொண்டது.

யோகசுவாமிகளின் ஒவ்வொரு வார்த்தையும் ஞானமும் தீர்க்க தரிசனமும் நிறையப்பெற்ற அமுதமொழிகள்.

இவை நமக்கு அருள் பாலிக்கின்றன. பொருள் நிறைந்த வாழ் வைத் தருகின்றன.

சிவபுராணத்தை தினந்தோறும் முழுமையாகப் படித்தும் ஒவ் வொரு நாளும் எங்கள் வேலைகளுக்குள்ளும் இடையிடையே, சில சவபுராண அடிகளையோ அல்லது சில சிவபுராண அடிகள் தரும் கருத்துக்களையோ நினைந்தும் வருவதால் எங்கள் மனம், வேறு எண்ணங்கள் எங்களைப்புறத்தே இழுத்துச் செல்லாத வண்ணம் காப்பாற்றப்படும். இவ்வகையால் எங்கள் மனம் பெலப்பட்டு உறுதி பெறுகிறது. உறுதிப்பட்டெ மனம் ஓயவேண்டும். ஓய்ந்து எய்துவது மகிழ்ச்சி.

''சிந்தை மகிழ சிவபுறாணந்தன்னை

முந்தை வினை முழுது மோய வுதரப்பவ்யான்.''

நாம் சிவபுராணத்தை ஓதுவதால் எங்களிடத்தில் எண்ணங்கள் ஓய்ந்து, பெரின்பமாம் சுபநிலையை நாம் அடைவோம். முந்தை வினையே கன்மங்கள். இவைகள் எண்ணங்களாகின்றன. சொற் கள் எண்ணங்களிலிருந்து பிறக்கின்றன. எண்ணங்களே புத்தியா கிச் செயலை செய்விக்கின்றன. சொல், செயல்களின் விளைவாகப் புத்தியில் இன்பதுன்பங்களுண்டாகின்றன. இவைகளும் எண் ணங்களே. எண்ணங்கள் ஓய்வதால் அடையப்படும் சுபநிலை பேரின்பமாகும்.

எண்ணங்கள் ஓயாது எழுவதால் நாம் எம்மை அறிய முடியாதி ருக்கிறது. கடவுளை வணங்கமுடியாதிருக்கிறது. எம்மை அறிவதை யும் கடவுளை வணங்குவதையும் தரும் தவம் சிவபுராணத்தைப் படிப்பதாலும் தியானிப்பதாலும் வருகிறது. அப்போது எங்கள் மனம் எமக்கு உறவாகிறது.

சிவபுராணத்தால் நன்மை அடைவதற்கு ஒருவர் கற்றவல்லவ ராயிருக்க வேண்டியதில்லை. அவர் சிந்தித்துத் தியானத்தில் பழகி வருவது தான் வேண்டியது.

பல்லாயிரம் அடியார்கள் சிவபுராணத்தைப் பக்தி சிரத்தையு டன்தியானிப்பதற்குச்சுவாமிகளிடம் பழகிவந்தார்கள். சிவபுராணத் தைத் தினமும் படித்து வருதலும் சிவபுராணந் தரும் சிவத்தியான முமே ஒருவற்கு மிகச்சிறந்த சமய சாதனையாயமையும். இது, இடை யறாச் சிவதியானம் கைகூடுவதற்கு நல்ல ஓர் வழியாய் அமையும். சுவாமிகள், தன்னை நாடிய அடியார் எல்லாம் சிவபுராணத்தை ஓதிவ ரச் செய்வதில் செலுத்திய கவனமோ மிகப் பெரியது. இலங்கையில் இவ்வகையால் சிவபுராணப் படிப்பு சிறந்த சமயசாதனையாய் விளங் குகின்றது. சைவ சமயம் மாய்ந்து போகாது சிவபுராணமே உயிருடன் விழங்கச் செய்கிற தென்றால் அது மிகையாகாது. ஒருவர் சொல்லப் பலர் திருப்பிச் சொல்லும் கூட்டுப்பிரார்த்தனைக்கு மிக உகந்ததாய் இருப்பதாலுள் சமயப் பொருள் இலகுவில் விளங்கும் சொற்றொடர் களைச் சிறு பிள்ளைகளும் மனத்திற் பதிப்பராகையாலும் சிவபுரா ணப்படிப்பு வைபவங்களில் கைக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றே.

''சிவபுராணம் பாடி ப்க்தி பெற முயற்சிக்க வேண்டும்,'' என் பதை சிவஞான்யாகிய யோகர்சுவாமிகளின் பூசை ஆராதனைகளில் எமது தீர்மானமாக எடுத்துக்கொள்வோம். இந்த வழியே நம்மை உய் வித்து மேன்மைபடுத்தவல்லது.

யோகசுவாமிகளை வணங்கி அவர் வழியில் வாழ்வோமாக!

## சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியம் கட்டிட நிதி

**"சிவயோகசுவாமிகள் அடியார்களுக்கு ஒரு பணிவன்பான வேண்டுகோள் - சிவயோகசுவாமிகள் நம்பிக்கை நிதியம் கொழும்பில் நிர்மாணிக்கவிருக்கும் நிரந்தர நினைவாலயத் திற்கு தாராளமாக நன்கொடை தந்துதவுங்கள்."**

அன்பான அடியார்களே!

சிவபூமி என்று திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட எங்கள் நாட்டில் அவத ரித்த புகழ் பூத்த தவஞானி யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள். அவர் ஞானத்தின் திருவுருவமாக, நடமாடும் தெய்வமாக விளங்கி, தன்னைச் சரண் அடைந்தோர்களை எல்லாம் தன் உபதேசங்களால் நன்னெறி காட்டியவர். அன்னாரின் நல் உபதேசங்களும் வழிகாட்டலும் முழு மனித சமுதாயத்திற்கும் சென்றடைய வேண்டுமென்ற பெருநோக்கி னால் குருபரனின் நேர்வழிச் சீடர்கள் கொழும்பில், இலங்கை மத்திய வங்கி யின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் திரு ச. ஈஸ்பரதாசன் அவர்களின் தலைமையில், சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியம் ஒன்றினை 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாலாம் திகதி ஆரம்பித்தனர்.

இந்நிதியம் ஆரம்பத்தில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக சிவா னந்த நிலையத்திலும் இப்பொழுது பம்பலபிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் மாதந்தோறும் ஆயிலிய நட்சத்திரத்தில் சுவாமியின் திருவடி வழிபாடு, மகே சுர பூசை என்பவற்றை ஒழுங்காக நடாத்தி வருவதோடு அவ்வப்பொழுது குருபரனின் போதனைகள் அடங்கிய சிறு நூல்களையும் துண்டுப் பிரசுரங்க ளையும் வெளியிட்டு வருகின்றது. அத்துடன் பாடசாலை மாணவர்களி டையே சுவாமியின் நற்சிந்தனை பாடல் மனனப் போட்டியினை நடாத்திப் பரிசில்களும் வழங்கியுள்ளது. இப்பணிகளையும் புராண படனம் 'திரு முறை முற்றோதல்,' சிவதியானம் போன்ற இன்னோரன்ன சிவபணிகளைத் திறம்படச் செய்வதற்கு நிரந்தர நிலையம் ஒன்று இன்றியமையாதது.

